1975 மார்ச் 11]

College of Karnatic Music in Thanjavur District

* 268 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(*a*) whether the Tamil Nadu State Committee for the Bi-centenary of Vedanayagam has recently requested the Government for grants for opening a college of Karnatic Music at Thanjavur and

(*b*) if so, the details thereof?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:</u>

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. என். இட்டப்பா</u>: தலைவர் அவர்களே, கவிஞர் வேதநாயகம் அவர்கள் மாயூரத்தைச் சேர்ந்தவர்கள். தமிழில் முதன் முதலில் வெளி வந்த மிகப் புகழ்வாய்ந்த "பிரதாப முதலியார் சரித்திரம்" என்னும் நாவல் அவரால் இயற்றப்பட்டது. அத்தகைய சிறப்பான பாராட்டுக்குரிய வர் அவர். எனவே, அத்தகைய சிறந்த கவிஞருக்கு இந்த முறையில் நினைவுச் சின்னம் ஏற்படுத்துவதற்கு நமது அரசு இனிமேலாவது முயற்சி எடுக்குமா?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:</u> தலைவர் அவர்களே, அது பற்றி செயற்குறிப்பு எதுவும் இல்லை. அப்படியொரு கல்லூரி அமைக்க வேண்டுமென்று யாரிடத்திலிருந்தும் விண்ணப்பம் வரவில்லை. அதற்காகக் குழுவினர் இருந்து, அந்தக் குழுவினர் சிலபல செயற் குறிப்புகளுடன் அரசை அணுகினால், அரசு அவற்றைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

Power generator for Thanjavur Hospital

* 269 *Q.*—THIRU A. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether a generator was purchased for the purpose of meeting power cut or power failure at the R.M. Government Hospital, Thanjavur, if so, when; and

(*b*) whether the generator has been installed and has started working?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்:</u>

(அ) ஆம். 1971 செப்டம்பரில் வாங்கப்பட்டது.